**DEPOSITION OF WITNESS**
**<u>IN THE COURT OF JUDICIAL MAGISTRATE , MUDUKULATHUR</u>**

STC.No.388/2025

Prosecution witness.03

| | |
|---|---|
| பெயர் : கோட்டைச்சாமி | தொழில் : |
| தந்தை/கணவர் பெயர் : ஆறுமுகம் | கிராமம் : |
| வயது : | தாலுகா : |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths act, 1969 (Central Act 44 of 1969)

07.03.2026

(1ம் எதிரி ஆஜர், 2 மற்றும் 3ம் எதிரிகள் ஆஜர் இல்லை. எதிரிகள் சார்பில் கு.வி.மு.ச. பிரிவு 317 ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது).

**முதல் விசாரணை :**

**1)** நான் தற்போது கீழத்தூவல் காவல் நிலையத்தில் சிறப்பு சார்பு ஆய்வாளராக பணியாற்றி வருகிறேன். கடந்த 21.10.2025ம் தேதி காலை 07.30 மணியளவில் நான் கீழத்தூவல் காவல் நிலையப் பொறுப்பில் இருந்தபோது முதுகுளத்தூர் செல்வி மருத்துவமனையிலிருந்து கிடைக்கப்பெற்ற தகவலைப்பெற்று அங்கு சென்று உள்நோயாளியாக சிகிச்சையில் இருந்த முதுகுளத்தூர் தாலுகா, கதையனை சேர்ந்த சத்தியமூர்த்தி, த.பெ.ராஜேந்திரன் என்பவர் சிகிச்சையில் இருந்ததால் அவருடன் இருந்த அவரது உறவினரான இந்திரா காலனியை சேர்ந்த சண்முகவேல், த.பெ.மாடசாமி என்பவர் கொடுத்த புகார் வாக்குமூலத்தை பெற்று காலை 09.00 மணிக்கு நிலையம் வந்து புகார் வாக்குமூலத்தின் தன்மைக்கு ஏற்ப நிலையக் குற்ற எண்.149/2025 பிரிவுகள் 296(b), 115(2), 351(2) BNS கீழ் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தேன். **புகார் வாக்குமூலம் அ.சா.ஆ.2 ஆகவும், முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ.3 ஆகவும் குறியீடு செய்யப்படுகிறது.** பின்பு வழக்கு கோப்பை சார்பு ஆய்வாளர் திரு.விஜயபாஸ்கரன் அவரது பார்வைக்கு வைத்தேன்.

**2)** சார்பு ஆய்வாளர் திரு.விஜயபாஸ்கரன் வழக்கினை புலன்விசாரணைக்கு எடுத்துக்கொண்டு அன்றைய தினமே 10.30 மணிக்கு சம்பவ இடம் சென்று சாட்சிகள் லதா மற்றும் சாத்தையா ஆகியோர் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு

மாதிரி வரைபடம் வரைந்து பார்வை மகஜர் தயார் செய்துள்ளார். **பார்வை மகஜர் அ.சா.ஆ.4 மற்றும் மாதிரி வரைபடம் அ.சா.ஆ.5 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

**3)** அன்றைய தினமே பட்டியல் சாட்சிகளான சண்முகவேல், சத்தியமூர்த்தி, பாரதிதாசன், லதா மற்றும் சாத்தையா ஆகியோரை தனித்தனியே விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளார். வழக்கு சம்பவம் உண்மை என தெரிய வந்ததாலும் எதிரிகள் குற்ற சம்பவத்தில் ஈடுபட்டது உண்மை என தெரியவந்ததாலும் 1 முதல் 4 எதிரிகளை தேடிவந்த நிலையில் 21.10.2025ம் தேதி 17.00 மணிக்கு கீழத்தூவல் காவல்நிலையத்தில் வைத்து கைது செய்துதக்கபிணையத்தில் விடுவித்துள்ளார்.

**4)** பின்னர் அசா.2 சிகிச்சை பெற்ற முதுகுளத்தூரில் உள்ள தனியார் மருத்துவமனையான செல்வி மருத்துவமனைக்கு சென்று அங்கு மருத்துவர் திரு.ராம்குமார் என்பவரை விசாரித்து மருத்துவர் அசா.2க்கு ஏற்பட்ட காயம் சாதாரண காயம் என சான்று வழங்கியதை பெற்றுள்ளார். **விபத்து பதிவேட்டுடன் கூடிய காயச்சான்றிதழ் அசா.ஆ.6 குறியீடு செய்யப்படுகிறது.** வழக்கில் தடயப் பொருட்கள் எதுவும் கைப்பற்றப்படவில்லை.

**5)** அத்துடன் வழக்கின் புலன் விசாரணையை முடித்து எதிரிகள் மீது பிரிவுகள் 296(b), 115(2), 351(2) BNS கீழ் இறுதி அறிக்கையை கனம் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளார்.

**<u>எதிரிகள் தரப்பில் குறுக்குவிசாரணை</u>**

வாதி கொடுத்த பொய் புகாரை முறையாக விசாரணை செய்யாமல் முதல் தகவல் அறிக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றாலும், பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்துள்ளார் என்றாலும் சொன்னால் சரியல்ல. எதிரிகளுக்கும் இந்த வழக்கிற்கும் எந்த தொடர்பும் இல்லை என்றால் சரியல்ல.